'செமி-டீலக்ஸ்' பேருந்திற்குக் கட்டணம் ஒரு கிலோ மீட்டருக்கு 14.5 பைசா. ஆனால், ஆந்திர மாநிலத்திலே அதை 25 பைசாவாக ஒரு கிலோ மீட்டருக்கு இயக்கிக் கொண்டிருக்கிறார்கள். கேரள மாநிலத்தில் 25 பைசா; கர்னாடக மாநிலத்தில் 23.17 பைசா; மகாராஷ்டிர மாநிலத்தில் 29.17 பைசா. ஆகவே, எல்லா மாநிலங்களையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, குறைந்த கட்டணத்திலே பேருந்தை இயக்குகிறபோது, அதிலே பயணிகளுடைய எண்ணிக்கைக் குறைவாக இருக்கிறபோது, அதனை இயக்குவதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாவுக்கு வருகிற பயணிகளினுடைய நன்மையைக் கருதி, இப்போது தர்மபுரியிலிருந்து சென்னைக்கு வருகிற 5 பேருந்துகளில், ஒரு பேருந்தையாவது, ஒகேனக்கல்லிலிருந்து சென்னை மார்க்கத்திற்குத் திருப்பி விடுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து ஒகேனக்கல் வரையிலும் நேரடியாகப் பேருந்துகளை இயக்குவதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை. நாம் அதனை இயக்கிப் பார்த்ததற்குப் பிறகுதான் அந்தச் சாத்தியக்கூறுகள் இல்லையென்ற கருத்தை உங்களிடத்திலே குறிப்பிட்டேன். கிருஷ்ணகிரிக்கு அருகாமையிலும், தர்மபுரிக்கு அருகாமையிலும் இருக்கிற காரணத்தினால், பயணிகள், காலை நேரத்திலே செல்கிறபோது, அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக பல பேருந்துகள் அந்த வழியிலே இயக்கிக் கொண்டிருக்கிறார்கள்; அந்த வழித் தடங்களிலே அவர்கள் பயணம் செய்வதற்கு அவை ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 7, திரு. சிங்கை கோவிந்தராசு, மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்.

7—

சிங்காநல்லூர் தொகுதி எஸ்.எஸ். குளம் ஒன்றியத்தில் கூட்டுறவு நூற்பாலை அமைத்தல்.

***36571–திரு. சிங்கை கோவிந்தராசு:**

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

1994 நவம்பர் 4]

(அ) சிங்காநல்லூர் தொகுதி, எஸ்.எஸ். குளம் ஒன்றியத்தில் கூட்டுறவு நூற்பாலை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சிங்கை கோவிந்தராசு: ** டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அமைச்சர் அவர்களைப் பார்த்து கேள்விக் கேட்கக் கூடாது; என்னைப் பார்த்துக் கேள்விக் கேட்க வேண்டும். அதற்கு அவர் பதில் சொல்வார். ** என்று இருப்பது நீக்கப்படுகிறது.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து நூற்பாலை யார் கேட்டாலும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், என்னுடைய மாவட்டத்தில் மட்டும் இல்லையென்றே சொல்லி வருகிறார். அதனால்தான் நான் அவ்வாறு சொன்னேன். என்னுடைய சிங்காநல்லூர் தொகுதியிலே ஒன்றியப் பகுதியான சர்க்கார் சாமக்குளம் பகுதி, கிட்டத்தட்ட 4 இலட்சம் பேர் வாழ்கிற, அதுவும் விவசாயிகள் அதிகமாக வாழ்கிற பகுதி. அங்கே அதிகமாக வானம் பார்த்த பூமிதான் இருக்கின்றது. விவசாயிகளுக்கு விவசாயம் செய்வதற்குப் பயனுள்ளதாக இல்லாத விவசாய பூமியாக இருக்கிற காரணத்தினால், அவர்களுக்கு வேறு வேலைகள் எதுவும் இல்லாமல் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். அதுவும் ஆதிதிராவிடர்கள் மற்றும் ஏழைகள் அதிகமாக வாழ்கிற அந்த சர்க்கார் சாமக்குளத்திலே, பல தொழிற்புரட்சிகளையும், தொழில்களையும் துவக்கியிருக்கிற இந்த காலகட்டத்தில், எங்களுக்கு இல்லை என்ற பதிலைச் சொல்லாமல், டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய திருப்பெயரால், ஜே. ஜே. கூட்டுறவு நூற்பாலை என்பதை ஏற்படுத்தித் தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

****மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.**

[1994 நவம்பர் 4

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரைப் பொறுத்த அளவில், தனியார் நூற்பாலைகள் அதிகமாக இருக்கின்றன. தமிழகத்தில் ஏறத்தாழ 18 கூட்டுறவு நூற்பாலைகள் இருக்கின்றன. இதன் மூலமாக 27 இலட்சம் கிலோகிராம் நூலை நாம் உற்பத்தி செய்கிறோம். தற்போது நூல் உற்பத்தியில் நாம் உபரி மாநிலமாக இருக்கின்ற காரணத்தினால் இந்தக் கேள்விக்கே இடம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-25

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில், தற்போது நூல் உற்பத்தியிலே அதிக தேக்கம் இருக்கிறது என்று கூறுகின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடுத்த நிதி ஆண்டிலாவது இதுபற்றி ஏதாவது நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசிப்பார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின் சார்பில் நூற்பாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 8, திரு. செ. பெருமாள், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

8—

ஏற்காடு தொகுதி கோணஞ்செட்டியூரில் பாலத்தை புதுப்பித்தல்.

***20169—திரு. செ. பெருமாள்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஏற்காடு தொகுதியில் கோணஞ்செட்டியூர் அருகேயுள்ள பாலத்தைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS